**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 09.10.2025

SC. 202/2022

அ.சா 14 – பூபதிராமராஜ், காவல் உதவி ஆய்வாளர் ( ஓய்வு)

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ம் நாள் பூபதிராமராஜ் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூபதிராமராஜ் | தந்தை பெயர் | ராஜகோபாலன் |
| வயது | 60 | கிராமம் | கிருஷ்ணகிரி |
| வட்டம் | கிருஷ்ணகிரி | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. நான் கடைசியாக குருபரப்பள்ளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வில் இருந்து வருகிறேன். கடந்த 12.02. 2020 ம் ஆண்டு நான் சூளகிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் அவர்கள் காவேரி மருத்துவமனையில் இருந்து சிகிச்சையில் இருந்த சீனிவாசன் வயது 26 த/பெ கோவிந்தன் ஆருப்பள்ளி என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று காலை 9.00 மணியளவில் காவல் நியைலத்தில் இருந்த என்னிடம் ஒப்படைத்தார். நான் அந்த வாக்குமூலத்தை பெற்று எதிரிகள் கார்த்திக் மற்றும் பால்ராஜ் ஆகியோர்கள் மீது சூளகிரி காவல் நிலைய குற்ற எண் 59 /2020 ச/பி 294(பி) , 341 , 307 இதச வாக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் , புகார் வாக்குமூலத்தின் அசலையும் ஒசூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் அதன் நகல்களை

சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன். சூளகிரி காவல் ஆய்வாளர் வேறு பணி அலுவலில் இருந்ததால் அவரின் உத்தரவு படி வழக்கின் கோப்புகளை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 10.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் 1. கோவிந்தராஜ் 2. கேசவ மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரை தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா 5 மூலம் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ..சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் , அன்றைய தினமே மற்ற சாட்சிகளான 1. சீனிவாசன் 2.. சுப்ரமணி 3. பெத்தன்னா 4. முரளி மற்றும் கோவிந்தராஜ் மற்றும் கேசவமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் மறுநாள் 13.02.2020 மதியம் 12.00 மணியளவில் சூளகிரி – கும்பலம் சாலையில் ஆவின் டீ கடை

அருகே நாங்கள் போலிஸ் பார்டியுடன் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த நபரை நாங்கள் நிறுத்த முற்பட்டபோது அவர் ஓட எத்தளித்தார் அவரை பிடித்து நாங்கள் விசாரிக்க அவரது பெயர் கார்த்திக் த/ெ ப லட்சுமணன் , ஆருப்பள்ளி என்றும் கூறினார்., பின்னர் அவரை விசாரிக்க அவர் ஆருப்பள்ளியில் உள்ள சீனிவாசன் என்பவரை முன்பகையின் காரணமாக கத்தியால் வெட்டியதாகவும் கூறினார். அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அன்றைய தினம் மதியம் 12.10 மணிமுதல் 13.10 வரை சாட்சிகள் 1. வெங்கடராஜ் ( 40) 2. கிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கனவே அ,சா 6 மூலமாக அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டு விட்டது. பின்னர், எதிரி ஓட்டி வந்த வாகனம் பதிவு எண் TN 70 R0200 , Hero splendor வாகனத்தை மதியம் 13: 15 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அதற்கு கைப்பற்றுதல் மகஜரை தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.6 மூலமாக அ.சா.ஆ 4,

ஆக குறியீடு செய்யப்பட்டு விட்டது. பின்னர் , எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரியின் வீட்டின் பின்புறத்தில் மறைத்து வைத்திருந்த அருவாளை , எடுத்து ஆஜர் செய்தார். அதை அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றி அன்றைய தினமே மாலை 14: 20 மணியைபோல் கைப்பற்றிய அருவாளுக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். அந்த 2 கைப்பற்றுதல் மகஜரும் சாட்சிகள் கையொப்பம் மற்றும் எதிரியின் கையொப்பமும் பெற்றேன். 2 கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா 6 மூலம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டு விட்டது. பின்னர் எதிரியையும் கைப்பற்றிய பொருளையும் நிலையம் கொண்டு வந்து பின்னர் கைப்பற்றிய TN 70 R0200 , Hero splendor என்ற இரு சக்கர வானத்திற்கும் கைப்பற்றிய சுமார் 28 செமீ நீளம் உள்ள வளைந்த கூர்மையான இரும்பு பகுதியும் , சுமார் 11 செமீ நீளமுள்ள இரும்பு பூன் மற்றும் மரக்கைப்பிடியுடன் கூடிய கொடுவாள் ஆகிய 2 பொருட்களுக்கும் படிவம் 91 இரண்டு தயார் செய்தேன். சான்று பொருள் கொடுவாளுக்கு தயார் செய்யப்பட்ட படிவம் 91 க்கு **அ.சா.ஆ 9** ஆகவும் இரு சக்கர வாகனத்திற்கு தயார் செய்யப்பட்ட படிவம் 91 க்கு **அ.சா.ஆ 10** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் , எதிரியையும் கைப்பற்றிய சான்று பொருட்களையும் , தகுந்த பாராகாவல் வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினே். TN 70 R0200 , Hero splendor என்ற இரு சக்கர வாகனம் **அ,சா,பொ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் கோப்புகளை மேல் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் ஒப்படைத்தேன், அவர் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

புகார் வாக்குமூலத்தில் 11.02.2020 ம் தேதியில் மாலை 8.00 மணியைபோல் சம்பவம் நடைபெற்றதாகவும், பின்னர் ஒசூர் காவேரி மருத்துவமனையில் அ.சா 1 அனுமதிக்கப்பட்டதாகவும், கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 12.02.2020 ம் தேதி காலை 9.00 மணியை போல் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் Bajaj pulsar என்ற வாகனத்தை

பால்ராஜ் என்பவர் ஓட்டி வந்ததாகவும், அந்த வாகனத்தில் பின்னால் அமர்ந்து வந்து குற்ற செயல் புரிந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 முதல் 5 வரையான சாட்சிகளை 12.02.2020 ம் தேதியிலேயே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அவர்களது வாக்குமூலத்தை எதிரிகள் பால்ராஜ் மற்றும் கார்த்திக் ஆகியோர்கள் இருவரும் சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அ.சா 1 சீனிவாசன் மட்டுமே சம்பவத்தில் 2 நபர்கள் ஈடுபட்டதாக கூறியும், சாட்சிகள் முரளி , சுப்ரமணி ஆகியோர்கள் கார்த்திக் மட்டுமே சம்பவத்தில் ஈடுப்பட்டதாக கூறினார்கள். ஏரிக்கரையை கடந்துதான் ஆருப்பள்ளி கிராமத்திற்கு செல்லவேண்டும் என்றால் தற்போது அது எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ நேரம் இரவு என்பதால் சம்பவ இடத்தில் மின் கம்பங்கள் இருந்ததாகவோ, மின் விளக்குகள் இருந்ததாகவும், குறியீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.சம்பவ இடத்தில் இருந்து 100 மீ தள்ளி பெத்தன்னா என்பவரின் வீடு உள்ளதாகவும், அதேபோல் 80 மீ தள்ளி திம்மராயப்பா என்பவர் வீடு உள்ளதாகவும், பார்வை மகஜரில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்திலும் , முதல் தகவல் அறிக்கையிலும் சம்பவத்தின் போது எதிரிகள் Bajaj pulsar என்ற வாகனத்தில் வந்தததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கைப்பற்றிய வாகனம் TN 70 R0200 , Hero splendor என்றால் சரிதான். எதிரியை நாங்கள் பிடிக்கும் போது 2, 3 காவலர்கள் என்னுடன் இருந்தார்கள். இந்த விவரத்தை காவல் ஆய்வாளரிடம் நான் தெரிவிக்கவில்லை. அருவாளின் தடிமனை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் வெங்கடராஜ் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களிடம் நாங்கள் எதிரியை பிடித்து விசாரித்து கொண்ட போது அந்த வழியே வந்த நபர்கள் ஆவோம். மேற்படி நபர்களை சாட்சிகளாக இருக்க வேண்டிகொண்டதின் பேரில் சாட்சியாக அவர்கள் இருந்தார்கள். முதல் தகவல் அறிக்கையில் புகார் வாக்குமூலம் கொடுத்தவரிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் அதே போல்

சாட்சிகளின் வாக்குமூலங்களும் காவல் நிலைத்தில் வைத்து விசாரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது  என்றால் சரியல்ல. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை., சாட்சி பின்னிட்டு என்னை காவல் ஆய்வாளர் 16.02.2020 ம் தேதி விசாரித்ததாக தெரிவித்தார்.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur